**பண்டாரகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 01 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பண்டாரகம பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூலகப் புத்தகக் கணக்குகளின் ஆரம்ப மீதியைச் சீராக்குவதற்காக ரூபா 191,964 தொகை நூலகப் புத்தகக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதனப் பயன்பாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதிக் கணக்கிற்கு அப் பெறுமதி செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான எனது அறிக்கையின் 2.2.1 ஆம் பந்தியில் காண்ணபிக்கப்பட்ட தவறைச் சீராக்குவதற்காக ஊழியர் பிணை வைப்புக் கணக்கிற்கு ரூபா 8,810 தொகையும் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கிற்கு ரூபா 56,409 தொகை வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு ரூபா 65,219 செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ரூபா 73,119 தொகை ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு ஊழியர் பிணை வைப்புக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சி திணைக்களத்தினூடாக கடன் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த கப் வண்டிக்காக சம்பள மீளளிப்புகளிலிருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 706,145 தொகையான கடன் தவணைப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,178,457 தொகையான கப் வண்டியின் பெறுமதி கணக்கீடு செய்யப்படுவதற்காக 2014.08.20 ஆம் திகதிய LGD/01/E/2012/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் வழங்கியிருந்த அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக மொத்தப் பெறுமதியும் சொத்துக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதனப் பயன்பாட்டு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) கைத்தொழில் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 25,687 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பிரதான பேரேட்டின் படி, ரூபா 33,748,486 தொகையான வேறு வருமான மீதி ரூபா 33,752,787 ஆக வருமானச் செலவினக் கணக்கிற்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் நிலுவையான கைத்தொழில் வருமானம் ரூபா 26,733,120 தொகையான நிலுவையான வருமானக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதன மானிய கணக்கு செலவு வைக்கப்படுகையில் மீள மீளாய்வாண்டிற்குரித்தான நிலுவையாக ரூபா 50,234,779 தொகையான நிலுவையான வேறு வருமானக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதன மானியக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் நிலுவையான கைத்தொழில் மானியக் கணக்கு மீதி மற்றும் மூலதன மானிய வருமானம் ரூபா 50,234,779 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக் கணக்கு மீதியான ரூபா 128,984 தொகையாக 2011 ஆம் ஆண்டு முதல் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இது பெறவேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 49,747,634 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,295,262 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,755,603 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 9,020 | 7,072 | 8,758 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 181 | 160 | 181 |
| (iii) | ஏனைய வருமானம் | 90,272 | 14,859 | 117,005 |

**2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2013 ஆம் ஆண்டிற்குரித்தான பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நடாத்தப்பட்ட வியாபார நிலையத்தால் வருடாந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 18 வகையான அனுமதிப்பத்திரங்களுக்குரித்தான 157 அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவர்களில் 104 பேர் 2013 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் ஏப்ரல் மாதத்தின் பின்னரே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படும் வியாபாரம், மலர்ச்சாலைகள், இரசாயன உரங்கள்.˙. விவசாய இரசாயன விற்பனைக் கூடங்கள் மற்றும் மீன் பிடி விற்பனைக் கூடங்கள் நடாத்தப்பட்ட போதிலும் அனுமதிப்பத்திரப் பதிவேட்டின் படி அத்தகைய வியாபாரக் கூடங்கள் எதுவும் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(இ) அனுமதிப்பத்திரப் பெறுவனவில் தாமதம் மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமை தொடர்பாக கணக்காய்வுத் தினமாகிய 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் சபை எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 6,326,485 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 66,276,297 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பண்டாரகம பூங்கா வீதி 2 ஆம் ஒழுங்கை ( 1 ஆம் கட்டம்)

மேற்குறித்த வீதி 126 மீட்டர் நீளமாகவும், 3.66 மீற்றர் அகலமாகவும் இடப்படுவதற்காக ரூபா 1,000,000 தொகையான மதிப்பீடு 2013 ஆகஸ்ட் 14 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2014 யூன் 27 ஆம் திகதி சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பணிப்பாளர் (மக நெகும) இன் 2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய MPH/HYW/MNG/D ஆம் இலக்க கடிதத்தின் படி ரூபா 1,000,000 தொகையான ஓர் செயற்திட்டத்திற்காக 19000 கொங்கிறீட் கற்கள் இடப்பட வேண்டிய போதிலும் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடு மற்றும் கொடுப்பனவு அறிக்கையின் படி 17200 கற்கள் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ii) வீதியின் வேலை பூர்த்தியடைந்ததை அடுத்து இரு மருங்கிலும் மண் இடப்பட்டு தயார்படுத்துவதற்காக ரூபா 9,008 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வீதியின் இரு மருங்கிலும் மண் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்புறுகொட வில்கொட பொதுக் கிணறு

இவ் வீதி 126 மீட்டர்கள் நீளமாகவும் 3.66 மீட்டர்கள் அகலமாகவும் அமைக்கப்படுவதற்காக ரூபா 1,000,000 தொகையான மதிப்பீடொன்று 2013 ஆகஸ்ட் 16 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் 2014 யூன் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 17200 கொங்கிறீட் பதிக்கப்படுவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) பௌதீக ஆய்வின் போது 194.3 மீட்டர்கள் நீளமாகவும் கொங்கிறீட் தடையுடன் சாதாரண அகலம் 3.5 மீட்டர்களானதுடன் கொங்கிறீட் தடையின் அகலம் 0.3 மீட்டர்களாகியது. பூர்த்திசெய்த வீதியின் மூன்று இடங்களில் எடுக்கப்பட்ட அளவுகளின் படி, ஒரு சதுர மீட்டருக்கு 41 கற்கள் (வழமையான அளவாக)

பதிக்கப்பட்டிருந்ததுடன் இதன் படி வீதிப் பரப்பிற்காக 25490 கற்கள் பதிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. இதன் படி, மதிப்பீட்டைப் பார்க்கிலும் கூடுதலாக 14651 கற்கள் பதிக்கப்பட்டிருந்த 74.3 மீட்டர்களுக்காக மேலதிக மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் மேலதிக ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்ட விதம் தொடர்பான தகவல்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொதுக் கிணற்றுப் பகுதியிலிருந்து 50 மீட்டர்கள் அளவு தொலைவில் வீதியில் அப் பக்கச் சுவர் வெடிப்பிற்குள்ளாகியிருந்தது.

(iv) வீதியின் இரு மருங்கிலும் மண் நிரப்பப்படுவதற்காக ரூபா 9,008 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மண் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள்

சபையின் 2 நடைமுறைக் கணக்குகளுக்குரித்தான 2014 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு 06 மாதங்களுக்கு மேற்பட்ட எனினும், கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 50,234 தொகையான 17 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(இ) ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) முற்பண தீர்ப்பனவு

நிதிப் பிரமாண 371(அ) இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் உரிய செயற்பாடு பூர்த்தியானதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் 8 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 317,000 தொகையான முற்பணத் தொகை 02 மாதங்களுக்கும் 09 மாதங்களுக்கும் இடையிலான காலமாக தாமதித்துத் தீர்க்கப்பட்டிருந்தது. இவ்வாறே, 2013 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 4,161,182 தொகையான தீர்க்கப்படாத முற்பண மீதி நிலவியதுடன் இதில் ரூபா 881,105 தொகை 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் இனங்காணப்படாத மீதியாகக் காணப்பட்டது.

(இ) ஊழியர் பிணை

சபையில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களில் 37 பேரில் 27 பேர் பிணை வைத்திருக்கவில்லை.

(ஈ) பால் விற்பனை நிலைய விற்பனை வருமானச் சேகரிப்பு

பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திற்கு அருகாமையில் இயங்கிய சபைக்குரித்தான பால் விற்பனை நிலையத்தில் சேகரிக்கப்பட்ட பணம் நாளாந்தம் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிராததுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட நாளாந்த வருமானம் சபைக்கு அனுப்பிவைக்கப்படுவது 03 நாட்கள் முதல் 06 நாட்கள் வரையான கால தாமதமாகியிருந்தது.

(உ) வாகன விபத்துக்கள்

-----------------------------------

சபையின் கப் வாகனமொன்று 2013 ஆம் ஆண்டின் போது விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் அவ் வாகனம் பழுதுபார்க்கப்படுவதற்காக ரூபா 108,480 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் 104(1) ஆம் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**3.3. முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

-------------------------------------------------------

(அ) சபைச் செயலாளர் 2013 ஒக்டோபர் 04 ஆம் திகதி லீவைப் பெற்றிருந்ததுடன் வேலை அதிகாரி 2013 ஒக்டோபர் 04, 23 மற்றும் நவம்பர் 23 ஆம் திகதி லீவு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந் நாட்களில் நடாத்தப்பட்ட திட்டக் குழுக்களுக்காக அவ் உத்தியோகத்தர்கள் நாளொன்றிற்கு ரூபா 650 படி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப்பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) சபையிடமுள்ள 5 மோட்டார் வண்டிகளுக்கு எரிபொருள் வழங்கப்படும் அடிப்படையில் சபையின் 5 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மோட்டார் சைக்கிள் ஒப்படைப்பு கடிதத்தின் படி தவணைச் சேவைகளும் பராமரிப்பு நடவடிக்கைகளும் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தவணைச் சேவைகளுக்காகவும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காகவும் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 143,926 தொகை சபையால் ஏற்கப்பட்டிருந்தது.

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

-------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 18 ஊழியர்களின் பற்றாக்குறையும் 4 ஊழியர்களின் மிகையும் நிலவியமை கண்டறியப்பட்டது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---------------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) கணக்கீடு
(ii) வருமான நிருவாகம்
(iii) நிதிக் கட்டுப்பாடு
(iv) சொத்துக்கள் முகாமைத்துவம்
(v) இருப்புக் கட்டுப்பாடு